தினமணி

22.4.2008

# வீரப்பன் அதிரடிப்படை தாக்குதல்: விடுபட்டோருக்கும் நிவாரணம்

சென்னை, ஏப். 21: வீரப்பன் தேடுதல் வேட்டையின்போது அதிரடிப்படையால் பாதிக்கப்பட்டவர்களில், விடுபட்டவர்களுக்கும் நிவாரணம் அளிக்கப்படும் என்று முதல்வர் கருணாநிதி அறிவித்தார்.

சட்டப் பேரவையில் திங்கள்கிழமை கேள்வி நேரம் முடிந்தவுடன் பேரவை பாமக தலைவர் ஜி.கே. மணி, பேரவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சிவபுண்ணியம் ஆகியோர் இது தொடர்பாக பிரச்னை எழுப்பியபோது முதல்வர் கருணாநிதி அளித்த பதில் விவரம்:

"வீரப்பனைத் தேடும் பணியில் முன்பு அதிரடிப்படையினர் நடத்திய எதிர்பாராத காரியங்களால் கிராமத்தில் உள்ள மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக நீதிபதி சதாசிவா தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது.

விசாரணைக் கமிஷனின் அறிக்கை 2006-ம் ஆண்டு அக்டோபரில் வருவதற்கு முன்பே, போலீசாரின் கெடுபிடிகளால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமாக முதல் கட்டமாக ரூ. 20 லட்சத்தை திமுக அரசு வழங்கியது. பிறகு கர்நாடகத்தில் - தமிழகத்தில் 89 பேர் பாதிக்கப்பட்டதாக கமிஷன் அறிக்கை அளித்தது.

**ரூ.1 கோடியே 50 ஆயிரம் நிவாரணம்:**

கமிஷன் அறிக்கையின்படி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழக அரசு சார்பில் மொத்தம் ரூ.1 கோடியே 50 ஆயிரம் நிவாரணம் அளிக்கப்பட்டது. இதற்கு பிப்ரவரி 2007-ல் ரசீதுகள் எல்லாம் பெறப்பட்டன.

இவ்வளவுக்கும் பிறகு, 'நீதி கேட்டு நெடிய பயணம்' என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டது.

இதைபடித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலர் தா. பாண்டியன், துணைச் செயலர் மகேந்திரன் ஆகியோரை நான் அழைத்து, பாதிக்கப்பட்ட மக்களில் யார் யாருக்கு எவ்வளவு ரூபாய் கொடுக்கப்பட்டது என்ற ஆதாரங்களைக் காண்பித்தேன்.

தமிழகத்தின் எல்லைக்குள்ளே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி அளிக்கப்பட்டுவிட்டது. எங்களுடைய கடமையை நாங்கள் செய்துவிட்டோம். கடமையைச் செய்ய வேண்டியது கர்நாடக அரசுதான். அவர்கள் அப்போதே பாதியை ஒத்துக் கொள்வதாகச் சொன்னார்கள். இன்னும் கொடுக்கவில்லை என்றால், உங்களுடைய போராட்டம் அங்கல்லவா நடைபெற வேண்டும்.

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டிதானா என்று நான் அவர்களிடத்தில் கேட்டேன். மேலும் நான் கொடுத்த ஆதாரங்களைப் பார்த்துவிட்டு, சரி என்றுதான் சொல்லிவிட்டுப் போனார்கள். ஆனால், அதற்கு முன்பே போராட்டத்தை அறிவித்து விட்டதால், 200 பேர் கைதாகி விடுதலை செய்யப்பட்டனர்" என்றார் கருணாநிதி.

**ஜி.கே. மணி (பா.ம.க.):** முதலில் நிவாரணம் வழங்கியது தமிழக அரசுதான். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், 89 பேருக்கும் மேலே விடுபட்டவர்களும் இருக்கிறார்கள். அதே நேரத்தில், பாதிக்கப்பட்டு கர்நாடகத்தில் இருந்தவர்கள் கூட, தமிழர்கள் என்ற காரணத்தால் தமிழகத்திலே குடியிருந்து வருகிறார்கள். கர்நாடக அரசு நிவாரண உதவி வழங்க மறுக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல தீர்வினை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்):** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் அறிவித்திருக்கும் போராட்டம், தமிழக அரசுக்கு எதிராகவோ அல்லது முதல்வருக்கு எதிராகவோ நடைபெறவில்லை. சாட்சி சொன்ன அனைவருக்கும் முதல்வர் நிவாரணம் வழங்கி விட்டார். ஆனால், சாட்சி சொல்ல வருவதற்கே தயாராக இல்லாமல் - அச்சத்தின் காரணமாக வராதவர்களுக்கு உண்மையைக் கண்டறிந்து நிவாரணம் வழங்க வேண்டும் என்பதே கோரிக்கை.

**முதல்வர் கருணாநிதி:** கர்நாடக அரசு எதையும் கொடுக்கவில்லை. காவிரியிலிருந்து ஒகேனக்கல் வரையில் அவர்கள் தடையாகத்தான் இருக்கிறார்கள். அதையெல்லாம் பெற வேண்டிய முறையில் நாம் பெறுவோம். அது வேறு விஷயம்.

உண்மையில் யார், யார் பாதிக்கப்பட்டார்கள், யார் யார் சாட்சி சொல்ல வரவே முடியவில்லை என்ற விவரம் இதுவரை அரசுக்கு அளிக்கப்படவில்லை. அதை விசாரித்து ஏதேனும் நிவாரணம் அளிக்க வேண்டுமென்றால், அதை அளிக்க அரசு தயாராக இருக்கிறது. ஆனால், எடுத்த எடுப்பிலே போராட்டம் என்று அறிவிப்பது அவ்வளவு நல்லது அல்ல.